செ.வெ.எண்.376 நாள்.11.06.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் 70 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் அவர்கள் தலைமையில் இன்று (11.06.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள். முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் இருக்கைக்கு சென்று அவர்களது கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 16 மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்லி கடிகாரம், உருப்பெருக்கி உள்பட ரூ.28 ஆயிரம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட தாட்கோ மூலம் ஒரு பயனாளிக்கு ரூ.1.02 இலட்சம் அரசு மான்யத்துடன் ரூ.3.40 இலட்சம் மதிப்பிலான ஆம்னி வேன்யையும், ஒரு பயனாளிக்கு ரூ.82.05 ஆயிரம் அரசு மான்யத்துடன் ரூ.6.14 இலட்சம் மதிப்பிலான பயணிகள் ஆட்டோவினையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 2015ம் ஆண்டு 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் 3ம் இடம் பெற்ற மாணவி செல்வி எஸ்.சுவேதா—க்கு புதுடெல்லி டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் மூலம் வழங்கப்பட்ட பரிசுத் தொகை ரூ.40 ஆயிரத்திற்கான காசோலையினையும், திருநெல்வேலி வட்டத்தை சார்ந்த 15 பயனாளிகளுக்கு தலா ரூ.20000/— மதிப்பில், மொத்தம் ரூ.3 இலட்ச மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் ஒரு பயனாளிக்கு ரூ.8846/— மதிப்பிலான இலவச தையல் இயந்திரத்தினையும், பாளையங்கோட்டை வட்டத்தை சாா்ந்த 15 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், பாளையங்கோட்டை வட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/— பெறுவதற்கான உத்தரவினையும், மாண்புமிகு முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/— பெறுவதற்கான உத்தரவினையும், திருநெல்வேலி வட்டத்தைச் சார்ந்த 15 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் ஆக மொத்தம் 70 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, உதவி ஆணையர் (கலால்) திரு.பழனிக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.வை.இளங்கோ, தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.மாரிமுத்து மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.